DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 250/2023 |
| Police Station | Manamadurai PS |
| Deposition of Witness for | LW.6 /PW.6 |
| Name | பெருமாள் |
| Father's/Husband's Name | சுந்தரம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Absent. 317 crpc Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.11.2025 at **11**.35 a.m

**முதல் விசாரணை:**

நான் தீர்த்தான்பேட்டை கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் மானாமதுரை குரூப் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி செல்லக்கண்ணனை எனக்கு தெரியும். கடந்த 23.11.2022 அன்று மாலை சுமார் 3.30 மணியளவில் நான் மானாமதுரை அண்ணாசிலையிலிருந்து பைபாஸ் நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஒரு எம் 80 இருசக்கர வாகனம் டாடா ஏஸ் வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு பெயர் தெரியவில்லை. ஒரு நபருக்கு காயம் ஏற்பட்டது. அதன்பிறகு நான் 108க்கு போன் செய்து காயம்பட்ட நபரை மானாமதுரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :–**

என்னை எஸ்.பி.சி.ஐ.டி எஸ்.பி ஆபிசில் இருந்து வந்து விசாரித்தார். என்னை சிவகங்கை வரச்சொல்லி அங்கு வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரிப்பதற்கு சம்மன் எதுவும் கொடுக்கவில்லை போன் மூலம் தகவல் கொடுத்தார்கள். அந்த போன் நம்பர் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை விசாரித்த

அதிகாரியின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. செல்லக்கண்ணனை நான் நேரடியாக பார்த்ததில்லை என்றால் சரிதான். அடிபட்டு கிடந்த நபர் சாலையின் ஓரமாக கிடந்தார். எம் 80 இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் TN 59 P 1822 ஆகும். சம்பவ இடத்தின் அருகே ஸ்பீடு பிரேக்கர் உள்ளது என்றால் சரிதான். எம் 80 இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாக வந்ததால் வேகத்தடையில் நிலை தடுமாறி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனது கிராம நிர்வாக அதிகாரியின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 250/2023 |
| Police Station | Manamadurai PS |
| Deposition of Witness for | LW.7 /PW.7 |
| Name | தாமோதரன் |
| Father's/Husband's Name | முருகேசன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Absent. 317 crpc Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.11.2025 at **11**.45 a.m

**முதல் விசாரணை:**

நான் மானாமதுரையில் வசித்துவருகிறேன். நான் கறிக்கடை வைத்துள்ளேன். எனக்கு தேதி ஞாபகம் இல்லை. காலை 9 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் ரயில்வே கேட் அருகில் சென்றேன். அங்கு போலீசார் வரைபடம் போட்டார்கள் அதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள்., நான் கையொப்பம் போட்டு கொடுத்தேன். வரைபடத்தில் கையெழுத்து போட்ட மற்றொரு நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். <u>என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.2.</u>

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் கையொப்பம் போட்டு 1 வருடம் இருக்கும் என்றால் 1 வருடத்திற்கு மேல் இருக்கும். ஏற்கனவே போலீசார் வரைந்து வைத்திருந்த படத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான், என்னிடம் கையொப்பம்

வாங்கிய பேப்பரில் என்ன உள்ளது என்று தெரியாது.  இந்த வழக்கு பற்றிய விபரமும் எனக்கு தெரியாது.

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை